விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

பக்கங்கள் 4 | கொழும்பு, சாவகச்சேரி, ... 27வ வியாழக்கிழமை | Colombo, November 13 1947 | வரிஷம் 13வ தனுஹரஷ் பிறை 29 | இதழ் 163

பிரிட்டிஷ் பிரதமர்-இந்தியா கவர்னர் ஜெனரல் சந்திப்பு

ஸ்ரீநகரில் பண்டித நேரு

மார்மகோவா துறைமுகத்தை விலைக்கு வாங்க ஹைதராபாத் முயற்சி

லண்டன், நவ 11

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் எலிஸபெத் இளவரசி கலியாணத்திற்கு விஜயம் செய்யும் பொருட்டு இரண்டு வார ரஜாவில் புதுடில்லியிலிருந்து புறப்பட்டு இன்று இங்குவந்து சேர்ந்தார். இங்கு வந்ததும் அவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லியைச் சந்தித்துப் பேசினார்.

ஷேக் அப்துல்லா அறிக்கை

ஸ்ரீ நகர், நவ 11

காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் அப்துல்லா நேற்றிரவு பத்திரிகை நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்தார்:- அடுத்த வசந்த காலத்திற்கிடையே காஷ்மீர் இந்தியாவுடனோ பாக்கிஸ்தானுடனோ சேருவதைக் குறித்து நிச்சயிக்க பொதுஜன வாக்கெடுப்பு நடத்த முடியாது. ஒருவேளை பொது ஜன வாக்கெடுப்பே நடைபெறாது. பரமுலா, ஊரி, பட்டான், முசாபர்பாத் முதலிய இடங்களில் நடைபெற்ற அட்டூழியங்களைக் கவனிக்கும்பொழுது காஷ்மீர மக்கள் பொது ஜன வாக்கெடுப்பைக் குறிக்கு சிந்திக்கக்கூட மாட்டார்கள். படையெடுத்து வந்த படுபாவிகள் மிருகத்தனமாக நகரங்களைச் குறைபாடினர், பெண்களைக் கற்பழித்தனர்; குடிஜனங்களைக் கொலை புரிந்தனர். பாக்கிஸ்தான் பெயரால் படையெடுத்துவந்த இவர்கள் ஜனங்களைக் கொன்று காஷ்மீரின் செழிப்பான பள்ளத்தாக்குப் பிரதேசங்களை துப்சம் செய்தனர்.

பரிதாபக் காட்சி

நியூயார்க், நவ 11

'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் அதன் பரமுலா நகர நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:- பரமுலாவானது காஷ்மீரத்தின் சௌந்தரியமான பள்ளத்தாக்கில் இருக்கும் ஓர் அழகியுள்ள நேர்த்தியான நகரம். காஷ்மீரத்தின் மீது படையெடுத்துவந்த எல்லைப்புற மலை ஜாதியார், அந்நகரைப் பாழாக்கிவிட்டு ஓடிப்போய் விட்டார்கள். நகரில் அவர்கள் கொளுத்திய தீயினால் கிளம்பியபுகை இன்னும் புகைந்துகொண்டிருக்கிறது. 13 தினங்களாக இம் மலை ஜாதியார் நகரைக் கொள்ளையடித்து அங்குள்ள பெண்களைக் கற்பழித்தார்கள்; நகரவாசிகளைகொலை செய்தார்கள் நகரின் செல்வத்தையும் இளம் பெண்களையும் பாழாக்கிவிட்டு, இந்திய ராணுவத்தற்குப் பயந்து வெள்ளிக்கிழமை இரவு ஓட்டம் பிடித்தனர். மலைஜாதியினர் சுமார் 100 பேர்கள் சுமார் 500 பேர்களைப் பிணையாகப் பிடித்துக்கொண்டுபோய் இன்னும் மலைகளில் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். தங்கட்கிழமையன்று நகரைச் சுற்றிப் பார்வையிட்டபோது அங்கு வசித்து வந்த மொத்தம் 14000 ஜனங்களில் 1000 பேர்களே இருந்தனர். காது, கழுத்து, கைகளிலுள்ள ஆபரணங்களை இழந்து, கறையுமிளந்த கன்னிகைகளும் மாகர்களும் கதறி அழுது கொண்டிருந்த காட்சி மிகவும் பரிதாபமாக இருந்தது.

படையெடுத்துவந்த பாதகர்கள் அழகான இளம் பெண்களையும் கொள்ளைப் பொருட்களையும் 280 டிரக்குகளில் ஏற்றிக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள்.

ஓட்டம்

ஸ்ரீநகர், நவ. 11

படையெடுத்துவந்த மலை ஜாதியினர் ஓட்டம் பிடிக்க அவர்களை இந்தியத் துருப்புகள் தரத்திக் கொண்டே முன்னேறிச் செல்கின்றன. இந்தியத் துருப்புகள் ஊரி நகரருகே சென்றுவிட்டன. படையெடுத்து வந்தவர்கள் முதன் முதல் இதைத்தான் மூன்று வாரங்களுக்கு முன் கைப்பற்றியிருந்தனர். ஓடும் மலைஜாதியார் பாதையிலுள்ள இரு பாலங்களை அழித்தனர். ஆனால் இந்தியத் துருப்புகள் வேறு வழியாக நதியைக் கடந்து எதிரிகளை துரத்திச் சென்றனர். பாலங்களுக்கருகே சிறு சிறு சண்டைகள் நடைபெற்றன. முதல் சண்டையில் 20 எதிரிகள் சுடுபட்டுள்ளப்பட்டார்கள்.

ஓடிப்போகும் அநேக லொறிகளை இந்திய ராணுவ விமானங்கள் கண்டுபிடித்து அவைகளைச் சுட்டபோது 6 லொறிகள் அழிந்தன. ஒரு இந்தியராணுவ அதிகாரிசிறு துகாயமடைந்தார்.

ஸ்ரீநகரில் நேரு

இந்திய பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவும் காஷ்மீர் மகாராஜாவும் இன்று இங்கு வந்து சேர்ந்தார்கள். பண்டித நேரு காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் அப்துல்லாவுடன் மகத் அரண்மனையில் விருந்தாடினார். இன்று பிற்பகல் இங்கு நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் பண்டித நேரு பேசினார். ஷேக் அப்துல்லா மாளிகையில் காஷ்மீர் மந்திரி சபைக் கூட்டம் நடைபெற்றது.

எல்லை சர்க்கார் அறிக்கை

பெஷாவர், நவ. 11

வடமேற்கு எல்லைப்புற மாகாண சர்க்கார் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்கள்:-

நேற்று ஒரு ஆகாயவிமானம் ஹஜாராஜல்லாவிலுள்ள காரூபியுலா என்னுமிடத்திலிருக்கும் போலிஸ் சாவடி பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது அதனால் ஏற்பட்ட சேதங்களின் விபரம் எதிர்பார்க்கப் படுகிறது.

ஜூனாகத் திவான் அறிக்கை

கராச்சி, நவ. 11

ஜூனாகத் சமஸ்தானத்தின் திவான் சர் ஷாநவாஸ் புட்டோ விடுத்துள்ள அறிக்கையில், தான் காந்திஜீ உதவியை நாடியதாகவும், சமஸ்தான மனைவர் பதவிக்கு ஆபத்து வராது என்று காந்திஜி பதில் தெரிவித்ததாகவும் அதற்குள் கேப்டன் ஹார்லி ஜோனசுக்கு இறுதி எச்சரிக்கை கிடைக்கவே சமஸ்தானம் தற்காலிகமாக இந்திய யூனியனில்சேருவதாயிற்று என்றும் சமஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

உடின்டுட் ராஜினாமா?

பர்மா அந்நிய நாட்டு மந்திரி

ரங்கூன், நவ 12

பர்மா நிதி மந்திரியும் அந்நிய நாட்டு மந்திரியுமான உடின்டுட் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டதாக பர்மிய பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஆனால் இச்செய்தி இன்னும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆனால் அவர் ஹாவனா வர்த்தக மகாநாட்டுக்கு பர்மா பிரதிநிதியாகச் செல்வதற் ரத்து செய்யப்பட்டிருந்தது.

"யூ, என். பி.யை நம்பாதீ"

கொழும்பு, நவ. 12

பைகல வாலிப லீக் கூட்டமொன்று ஸ்ரீமதி எண். எம். பெரேரா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஸ்ரீமதி பெரேரா பேசுகையில் கூறியதாவது:-

இந்தியர், இலங்கைக்கு வருவது கூடாது என யூ என். பி தலைவர்கள் உங்களுக்கு கூறி உங்களை நம்பச் செய்யமுயற்சிப்பார்கள். ஆனால் நீங்கள் அவற்றைக் கேட்டு ஏமாந்து பிழையாக விளங்கிக் கொள்ளப்படாது. இந்திய தொழிலாளர் இலங்கையிலுள்ள முதலாளித்துவ எஸ்டேட் சொந்தக்காரர்களின் அழைப்புக்கிணங்கியே இங்கு வந்தவர்களாகும்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் அரசாங்க சபையில் பூ. என். பிக்கு எதிராக ஒருவர் தான் இருந்தாரென்றும் இப்பொழுது பாராளுமன்றத்தில் 20 பேர்களுக்கு அதிகமாக இருக்கின்றனர் என்றும் கூறினார் பலர் இக்கூட்டத்தில் பேசியபின் சாராயம் கள் வடிகட்டும் தொழிலை தேசியமயமாக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்ச் சங்க முன்னேற்றம்

கொழும்பு, நவ 12

கிராண்ட்பாஸ் ஆர்ச். ஜோஸப் கல்லூரி தமிழ்ச் சங்க வருடாந்தக் கொண்டாட்டத்திற்கு இலங்கை சர்வகலாசாலை தமிழ் பேராசிரியர் டாக்டர் கே. கண

பிற்பகலில் நடைபெற்ற பரீட்சை

காலையிலேயே வினாப்பத்திர வினியோகம்

பரீட்சை மண்டபத்தில் குளறுபடி

மாத்தறை, நவ. 12

சமீபத்தில் நடைபெற்ற சிங்கள ஆசிரியர் கடைசிப் பரீட்சையின போது மாத்தறையிலுள்ள பரீட்சை ஸ்தலத்தில் பிற்பகல் வினியோகிக்கப்பட வேண்டிய பாஷை வினாப்பத்திரங்கள் காலையிலேயே தபாலில் வினியோகிக்கப்பட்டு விட்டது.

இதனால் தெரியவந்ததும் வினாப்பத்திரங்கள் பரீட்சார்த்திகளிடமிருந்து சேகரிக்கப்பட்டது. ஆனால் அதற்கிடையில் பலர் கேள்விகளை நன்றாகப் பார்த்து விட்டார்கள். சிலர் பத்திரங்களை திருப்பிக் கொடுக்க மறுத்தனர். இதன் காரணமாக பிற்பகல் சோதனைக்கு பரீட்சார்த்திகள் மறுமொழிகளை ஆயத்தம் செய்து கொண்டேவர ஏதுவாயிற்று.

இது சம்பந்தமாக கல்வி அதிகாரி சான்டிமென் விசாரணை செய்து வருகிறார்.

கேள்விகள் பிரஸ்தாப சோதனை ஸ்தலத்தில் இருந்து பிற்பகல் சோதனைக்கு முன்னாடி இதர ஸ்தல மாணவர்கள் சிலருக்காவது தெரியவந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

வரி மதிப்பிடுபவர் நியமனம்

கொழும்பு, நவ. 11

ஸ்தல ஸ்தாபன சேவைக்கமிஷனர்கள் திரு எஸ் குமாரசிங்கம் அவர்களை கொழும்பு முனிஸிப்பல் சபையின வரி மதிப்பிடுபவராக நியமித்திருக்கின்றனர்.

சென்ற பதினைந்து மாதகாலமாக இவ்வுத்தியோகத்திற்கு ஒருவரும் நியமிக்கப்படாதிருந்தது. திரு குமாரசிங்கமவர்கள் தான் தற்காலிகமாக அக்கடமையை ஆற்றிவந்தவராவர் முப்பது வருஷங்களுக்கு முன் திரு குமாரசிங்கம் சப்-ஒவ்ஸியர் ஆக இவ்வலாகாவில் சேர்ந்தவராவர்.

பதிப்பிள்ளை தலைமை வகித்தார். சங்கத்தின் முன்னேற்றத்தைப் பாராட்டி டாக்டர் கணபதிப்பிள்ளை பேசினார்.

சென்ட் சபைக் கூட்டம்

ஸர். ஜோர்ட் விஜயக்கூன் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

திரு. பெரிசுந்தரம் உபத் தலைவர்

கொழும்பு, நவ 12

இன்று செனட் சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

ஸர். ஜோர்ட் விஜயக்கூன் அவர்கள் ஒரு அதிகப்படியான வாக்கால் செனட் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் போட்டியிட்டவர் திரு ஸி. குமாரசுவாமியாவர். திரு. ஸி குமாரசுவாமியின் பெயரை திரு ஈ. ஏ. பி. விஜயரத்னா பிரேரித்தார். திரு. ஏ. ஆர். ஏ. ராஸிக் அனுவதித்தார்.

ஸர் ஜோர்ட விஜயக்கூனின் பெயரை, சேர்னல் ஆர். வைறட் பிரேரித்தார்; திரு. டபிள்யூ. ஏ. பி. சொய்ஸா அனுவதித்தார். ஸர் விஜயக்கூன் 14 வாக்குகள் பெற்றார். திரு. ஸி குமாரசுவாமி 13 வாக்குகள் பெற்றார். சபைக்கு டாக்டர் ஸாம். குணசேகரா, டாக்டர் ஷொக்மன் ஆகிய இருவரும் சமுகமளிக்கவில்லை. திரு. பெரிசுந்தரம் உபத தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். அவருடன் போட்டியிட்ட திரு சி ஏ கார்டினர் தோல்வியுற்றார். திரு. பெரிசுந்தரத்திற்கு 14 வாக்குகளும் திரு. கார்டினருக்கு 12 வாக்குகளும் கிடைத்தன.

இளவரசி திருமணச்செய்திகள்

பல இடங்களிலுமிருந்துப் பரிசுகள்

காந்திகதராடை அனுப்புகிறார்

டாரெஸ ஸலாம், [தங்கநிக்கா] நவ 11

தங்கநிக்கா வைரச் சுரங்கச் சொந்தக்காரரும் உலகிலேயே மிக பணக்கார பிரமச்சாரியானா ஜே. டி. வில்லியம்ஸன் 54 கிராந்து ஊதா வைரம் ஒன்றை இளவரசி எலிஸபெத்தின் திருமணப் பரிசாக அனுப்பினார்.

இளவரசிக்குப் புது மனை

பங்கிங்ஹாம் அரண்மனைக்குச் சமீபம் உள்ள கிளாரன்ஸ் மாளிகையே இளவரசி எலிஸபெத்,லெப்டினென்ட மவுண்ட் பேட்டன் ஆகியோர் தமது திருமணத்தின் பின் வசிக்கும் உத்தியோக ரீதியான இல்லமாக விளங்கும் என்று அறிவிப்பட்டிருக்கிறது. மேற்படி கட்டிடம், 1825-ம் ஆண்டில் கட்டப்பட்டதாகும்.

கராச்சி, நவ. 10

எலிஸபெத் இளவரசி திருமணத்தை முன்னிட்டு இந்திய கவர்னர் ஜெனரல் மவண்ட் பேட்டன் பிரபு கராச்சியில் இருந்து விமான மார்க்கமாக இங்கிலாந்து புறப்பட்டுச் சென்று விட்டார். அவர் ராய்ட்டர் நிருபருக்குப் பேட்டி அளித்து பேசுகையில் இந்திய யூனியன் அளிக்க விருக்கும் கல்யாணப் பரிசு ஒரு விலைமதிக்க முடியாத ஹாரம் என்று கூறப்பட்டது

இந்திய மன்னர்களின் கல்யாணப் பரிசுகளையும் திருமவுண்ட் பேட்டன் கொண்டு செல்கின்றார்.

பாரதத்தின் மணப்பரிசுகள்

இந்தியப் பிரதமர் ஜவஹர்லால்நேரு சித்திரப் பட்டாலான ஒரு மேசை விரிப்பை பரிசாகஅனுப்புகிறார்.

மகாத்மா காந்தி தமது கரத்தினால் நெய்யப்பட்ட கதர் மேசை விரிப்பை வழங்குகின்றார்.

பாகிஸதான் பிரதமர் லியாகத் அலிகான் ஒரு நீலச் சேலையை அனுப்புகிறார்

பாகிஸதான் அரசாங்க சார்பில் சாஜகான் தனது அன்புப் பத்தினிக்குச் சமைத்த மஹத்தான ஞாபகச் சின்னமான தாஜ் மஹாலின் உருவம் செதுக்கப்பட்ட தந்தப் பேழை அனுப்பப்படுகிறது.

இந்தியா சார்பில் மணமகனுக்கு அனுப்பப்படும் பரிசு சிவபிரானின சிறியசிலையாகும்.

இளவரசி ஆஸ்திரேலியா விஜயம்

இளவரசி எலிஸபெத், லெப்டினென்ட் மவுண்ட் பேட்டனும் 1948 மூற்பகுதியில் ஆஸதரேலியா செல்வார்கள் என்று தெரிகிறது. (ராய்ட்டர்)

வைத்திய இலாகாவில் உத்தியோக மாற்றம்

கொழும்பு, நவ. 12

யாழ்ப்பாணததில் இருந்த டாக்டர் டி. பி. தாமோதரம் பலாங்கொடை டிஸ்டிரிக் வைத்திய அதிகாரியாக செல்வதால் விளிநொச்சியில் டிஸ்டிரிக்ட் வைத்திய அதிகாரியாக இருந்த டாக்டர் எஸ். விவேகானந்த ராஜா யாழ்ப்பாண பாடசாலைகள் வைத்திய அதிகாரியாக பதவி ஏற்றுள்ளார்.

மந்திரிகள் இஷ்டத்திற்கு மந்தண ஆணையை திருத்துவதா?

பிரிட்டிஷ் சர்க்கார் மறுப்பு

லண்டனுக்கு மற்றுமோர் தந்தி

கொழும்பு, நவ. 12

குடியேற்ற நாட்டு மந்திரி மந்தண ஆணைகளில் (ஓர்டர்-இன்-கவுன்ஸில்) 13 (பி) பிரிவிலுளள 13வது உப பிரிவில் 3 (டி) பகுதியை பிரதம மந்திரியின் கேள்விப்படி மாற்றியமைப்பதற்கு மறுத்து விட்டாரெனத தெரிகிறது.

இச்சட்டம் மாற்றப்படாவிட்டால் திரு. டி. எஸ சேனநாயக்கா, திரு. எஸ டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா, திரு. ஜார்ஜ் ஈ. டி சில்வா, கர்னல் ஜே எல். கொத்தலாவல ஆகிய நான்கு மந்திரிகளும் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இழக்க வேண்டி நேரிடுமென்று கூறப்படுகிறது.

இவ்விதியின்படி மந்திரிகள் அரசாங்க ஊழியர்கள் என்ற முறையில் சம்பளம் பெற்றிருந்தபடியால் தேர்தலில் நிற்பதற்கு அருகதையற்றவர்களென அர்த்தம் பண்ணிக் கொள்ளலாமாம்.

இது சம்பந்தமாக பிரதம மந்திரியின் தந்திக்கு குடியேற்ற நாட்டு மந்திரி சட்டத்தை மாற்றி அமைப்பதற்கு மறுத்து புதிய பாராளுமன்ற ஜனப் பிரதிநிதிகள் சபையின் தீர்மானத்தை அதைச் செய்ய வேண்டுமென்றும் கூறியிருக்கிறாராம்.

இம்மறுப்பு தெரிய வந்ததும் பிரதம மந்திரி திரு டி எஸ் சேனநாயக்காவும், இலங்கை கவர்னர் ஸர் ஹென்றி மூர் கலந்தாலோசித்து இன்னுமொரு தந்தியை குடியேற்ற நாட்டுக் காரியாலயமாகிய வெள்ளை மாளிகைக்கு அனுப்பியிருக்கிறார்களென அறியப்படுகிறது. அதந்தியில் மந்தண ஆணைகளின் 13 (பி) பிரிவை மாற்றுமபடி கேட்டிருக்கின்றார்கள்.

இம் மந்தண ஆணைகளை தயாரித்தவர்களின் நோக்கப்படி பழைய அரசாங்க சபை மந்திரிகளைப் பாராளுமன்ற சபைத் தேர்தலுக்கு நிற்காமல் செய்வதற்காகவல்லவாகையால் தேர்தலின் பின்பு அவ்வாணைகளிலுள்ள சிறு சொற் பிரயோகத்தை மாறுதல்களால் வெற்றி பெற்றவர்களை நீக்குவது முறையல்லவென்றும் கூறிக் கொள்ளுகிறார்கள்.

இச்சொல்லப்பட்ட பிரிவு முன்னொரு முறை குடியேற்ற நாட்டு மந்திரியால் திருத்தப் பெற்றது. ஆயினும் அத்திருத்த வசனங்கள் அவ்வளவு திருப்திகரமாகவில்லையாம்.

யு. என். பி யைத் தவிர்த்த ஏனைய அரசியல் கட்சிகள், குடியேற்ற நாட்டு மந்திரி இப்பொழுது இச்சட்டத்தை மாற்றுவது முறையல்லவென்று அபிப்பிராயப்படுகின்றனர். காரணம்? இச்சட்டத்தின்பேரில் பிரதம மந்திரியிலும், இன்னுமொரு மந்திரியிலும் வழக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

ஜனநாயக அரசியல் அமைப்பின்படி பாராளுமன்றம் கூடியதன் பின்பு குடியேற்றநாட்டு மந்திரி மந்தண ஆணைகளை மாற்றுவது முறையலலவென்றும் அவர்கள்சொல்லிக்கொள்ளுகிறார்கள். அது ஜனநாயக தத்துவத்தையே வேருடன் அழிப்பதாகுமாம்.

லண்டன் ஹோட்டல் வேலை நிறுத்தம்

பாராளுமன்ற அங்கத்தினர் சத்தியாக்கிரகம்

லண்டன், நவ. 12

நேற்றிரவு லண்டனிலுள்ள சாவாய் ஹோட்டலுக்கு விறகு கொண்டுவந்த மோட்டார்லொறிக்கு முன்பு பிரிட்டிஷ் பாராளுமன்றதொழிற் கட்சி அங்கத்தினரான 30 வயதுள்ள ஆர்தர் லூயிஸ் படுத்துக்கொண்டு அந்த லொறி விறகை ஹோட்டலில் இறக்காதபடி தடுத்து சத்தியாக்கிரகம் செய்தார். அவருடன் மற்ற தொழிலாளர்களும் சத்தியாக்கிரகம் செய்தார்கள் ஹோட்டல் ரைட்டர் வேலையிலிருந்து விலக்கப்பட்டதால் 6 நாட் களுக்கு முன்பு ஹோட்டல் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர் போலிஸார் வந்து சத்தியாக்கிரகிகளைக் கலைத்த பின் லொறியை டிரைவர் ஓட்டிச் சென்றார்.

களவாடப்பட்ட தேயிலை குகையில் இருந்தது

நாவலப்பிட்டி, நவ. 12

கினிகதேனாவில் உள்ள கெனிலவேத் குரூப் தேயிலைத் தோட்டத்தில இருந்து களவு போன தேயிலையைப் போலிஸார் அங்குள்ள குன்றின் பக்கத்தில உள்ள குகையில கண்டெடுத்தனர். இது சம்பந்தமாக இருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. எதிரிகளுக்கு தலா ரூ. 50 அபராதமும் கோர்ட் கலையும் வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இம்மந்தண ஆணை பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையில திருததப்படுவதாயிருந்தால் சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கததவர்களின் ஆதரவு இருக்கவேண்டும். இது இன்றுளள பிரதிநிதிகள் சபையில் இல்லையென்றே பிரதம மந்திரி திரு சேனநாயக்கா பயங்கொண்டு குடியேற்ற நாட்டு மந்திரியைக்கொண்டுதந்திமூலம் திருத்தியமைக்க முற்பட்டிருக்கிறார் என்று இங்கு நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இச்சட்டத்தின்படி சிலமேற் சபை அங்கத்தவர்களும் பாதிக்கப்படக்கூடுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, கட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஸ்ரீ ஐப்பசி மீ 27உ
வியாழக்கிழமை

லஞ்ச விசாரணை

யுத்த காலத்தில் இலங்கையில் கட்டுப்பாடு இலாகாக்கள் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டன. உணவுக் கட்டுப்பாடு, உடைக் கட்டுப்பாடு, பொதுக் கட்டுப்பாடு, உள்நாட்டு நெல்வளர்ப்பும் திட்டம், ஐக்கிய அபிவிருத்தி இலாகா போன்ற பல புதிய இலாகாக்கள் வேலை செய்தன. இதுடன் பல அவசரகால உத்தியோகஸ்தர்களும் பெருத்த சம்பளங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த அவசரகால இலாகாக்களில் உள்ள பலர் அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா என்ற நிலைமையில் தான் வேலை செய்தனர் என்பது பொதுவாக நம்பப்பட்ட விஷயம். இவ்விலாகாக்கள் மூலம் ஏதாவது பெறவேண்டியிருந்தால் "சம்திங்" கொடுத்துத்தான் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயமும் பொது மக்களிடையே நிலவியது. இந்நிலைமை உணவை நேர்மையுடன் தொண்டாற்றிய சிலருக்கும் அவமதிப்பைக் கொடுத்தது. இது சம்பந்தமாக அரசினரால் ஒன்றும் செய்ய முடியாதிருந்தது. காரணம்? லஞ்சம் கொடுத்தவர்களும், பெற்றவர்களும் கண்டு பிடிக்கப்பட்டால் நீதிமன்றத்தில் குற்றவாளியாவார்கள் ஆதலின் ஒருவரும் தாம் லஞ்சம் கொடுத்ததாகச் சாட்சி சொல்ல வெளிப்படமாட்டார்கள்.

இன்றும் நிலைமை யுத்தகாலம் போன்றே இருக்கின்றது. லஞ்ச வழக்கம் நின்றபாடில்லை. காலகதியில் நிரந்தர இலாகாக்களிலும் இது தாண்டவமாடுமோ என்று பொதுமக்கள் ஏங்குகின்றனர். கொழும்பும் மாதிய தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராகிய திரு பீட்டர் கெனமன் ஒருவகையில் இதற்கு விமோசனம் கொடுக்க முனைந்துள்ளார். கட்டுப்பாட்டு அதிகார உத்தியோகஸ்தர்கள் அவசிய உணவுப் பொருள் வியாபாரத்தில் சம்பந்தப்பட்டவர்களை ஆராயோரது செல்வ நிலைமையைப் பற்றி விசாரிக்க வேண்டும். இதற்கென ஒரு விசாரணைச் சபையை அரசாங்கம் நியமிக்க வேண்டும் என்ற ஓர் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் தாக்கொண்டுவரப் போவதாகவும் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார். இது வரவேற்கத் தக்கதே.

தட்டுக்கு வழியற்று இருந்த பலர், அவசரகால உத்தியோகங்களில் நியமிக்கப்பெற்றதும், குபேர சம்பத்தை அடைந்துவருவதாகக் கூறப்படுகிறது. இப்பணம் வந்ததற்கு வழிவகைகள் எவை என்பதை அறிய வேண்டும். துணிக்கடடுப்பாடு உணவுக் கட்டுப்பாடு முதலிய இலாகாக்களில் வேலை செய்து வந்த சில உத்தியோகஸ்தர்கள் தமக்கும், தமது மேலதிகாரிகளுக்கும் என பணம் பெற்றார்கள் என்று கூறப்படுகிறது. இன்னும் அதிகமாக லஞ்சமூலம் பணம் சேகரித்தவர்கள் உள்நாட்டு நெல் வளர்ப்பும் திட்டத்தின் கீழ் வேலை செய்த சிலர் தான் என்றும் சொல்லப்படுகிறது. ஏழைமக்களை மேலும் வருத்தாது லஞ்சப்பேயை அறவே ஒழிக்க விசாரணைச் சபை உடனே நியமிக்கப்படவேண்டும். அச்சபைக்கு நியமிக்கப்படுபவர்களும் பாரபட்சமற்றவர்களும், நேர்மையும் உறுதியுமுள்ளவர்களுமாக இருக்க வேண்டும். திரு. கெனமனின் தீர்மானத்திற்கு பிரதிநிதிகள் சபையில் எதிர்ப்பு இருக்கக் மாட்டாது என்றே நம்புகிறோம்.

இந்தியா போன்ற பல பிற தேசங்களில் யுத்தம் முடிந்ததும் இவ்வகையான விசாரணைச் சபைகள் நியமிக்கப்பெற்றுக் கருமங்கள் ஆற்றப்படுகின்றன. இலங்கை தேசப்பிரதிநிதிகள் என்று இருப்பவர்கள் உடனே இதற்கு விமோசனம் அளிப்பதே யாகவேண்டும்.

சூதாட்டக் கோஷ்டியை போலிஸார் கைது செய்தனர்

14 பேருக்கு அபராதம்

காலி, நவ. 11

காலி சிவில் ஆஸ்பத்திரிக்கு எதிர்புறத்தில் மகா மோதரையென்னுமிடத்தில் காலி ரஸதாவில் 321-ம் நவம்பர் இடத்தில் நடந்த சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 17 பேர்களை போலிஸார் கைதுசெய்து காலி மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்தனர். இவ்வழக்கில் 14 எதிரிகளுக்கு தலா ரூ. 25 அபராதம் விதிக்கப்பட்டது. இவர்களில் இருந்த ஒரு சிறுவனுக்கு சன்கு பிரம்படி கொடுக்குமாறு தீர்மானிக்கப்பட்டது. இவ்வழக்கில் கே. என். தோமன், டபிள்யூ. திஸநாயகா ஆகிய இருவரும் தாங்கள் குற்றவாளிகளல்ல வென்று கூறி, தன் மேல் இருவரையும் தலா ரூ 300 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கை டிசம்பர் 27-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். சூதாட்டஇடத்தை வைத்திருந்ததியதாக வில்லியம் சேனநாயகா என்பவருக்கு ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டது.

கரி மூடைகளுக்கடியில் 50 மூடை அரிசி

நால்வர் பிணையில் விடுதலை

நாவலப்பிட்டி, நவ. 11

மேல் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை கினிகதென என்னுமிடத்தில் சிறுத்தி போலிஸ் கான்ஸ்டபிள் ஜி. ஜே. பெரேரா சோதனை செய்தபோது 20 மூடை கரிக்குக் கீழே 50 மூடை அரிசி பதுக்கிவைக்கப்பட்டிருந்ததுகண்டு பிடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக கினிகதென போலிஸ் சார்ஜண்ட் டபிள்யூ. டொன் சைமன் என்பவர் அந்த அரிசிக்குச் சொந்தக்காரர்களான என்று கூறி நானயக்கார, பியசேன ஆகிய இருவரையும் லொறி சாரதி சோமதாஸா லொறி கிளினர் சைமன் சிங்கோ ஆகிய நால்வரையும் நாவலப்பிட்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

நானயக்கார, பியசேன ஆகிய இருவரையும் தலா ரூ 2000 பிணையிலும், சாரதி சோமதாஸாவை ரூ 1000 பிணையிலும், சைமன் சிங்கோவை ரூ 500 பிணையிலும் போகுமாறு விடுத்து லொறியுடன் அரிசியை வைத்திருக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

கத்தி முனையைக் காட்டி ரூ. 9000 அபேஸ்

கல்கத்தாவில் பகற் கொள்ளை

கல்கத்தா, நவ. 11

கல்கத்தாவின் முக்கிய வியாபார ஸ்தலமாகிய ஹாரிஸன் ரோட்டில் இன்று பிற்பகல் ஒரு துணிகரக் கொள்ளை நடைபெற்றது.

ரேஷன் சாமான்கள் வாங்கச் செல்லும் பையில் ஓர் ரூபாய் 9000 எடுத்துச் சென்றார். அப்பொழுது இருவர் கத்தி முனையைக் காட்டி பணமுறுக்கி பையைப் பிடுங்கிக் கொண்டு தப்பியோடிவிட்டனர். போலிஸார் 4 பேரை கைது செய்திருக்கின்றனர்.

மோட்டார் விபத்தில் பெண்மரணம்

கொழும்பு. நவ. 11

தெஹிவளை, காலி ரோட்டில் ஞாயிற்றுக்கிழமை இரவு எலென் அமரதுங்கா என்னும் அமரதுங்கா ஆராய்ச்சியோடி நோனா என்னும் பெண் ஒரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதால் பலத்த காயங்களுடன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனிறாமல் மரணமடைந்தாரென்று கூறப்படுகிறது. விபத்தினால் மரணமென்று விசாரணை செய்த அதிகாரி தீர்ப்பளித்தார்.

கல்கத்தாவில் ஆசிய கலாமன்றம்

சாரநாதில் பௌத்த சர்வகலாசாலை

மஹாபோதி சங்க முயற்சி

கல்கத்தாவில் இந்தோ சீனப் பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

கல்கத்தா, நவ. 11

இந்தோ சீனத்தில் இருந்து ஆசிய வட்டாரத்தொழில் மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் கோஷ்டிக்கு பௌத்த மகாபோதி சங்கத்தினரால் ஒரு வரவேற்பு இங்கே அளிக்கப்பட்டது. தூதுக்கோஷ்டியின் தலைவரான இளவரசி யுகுண்டுமுதலிய சகல பிரதிநிதிகளும் வைபவத்தில் கலந்துகொண்டனர். ஸர். விஜயபீரசாத்சிங்ரோஸ்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் ஆசியாவின் ஒற்றுமைபற்றி அதிகமாக வற்புறுத்தினார்.

இவ் ஒற்றுமை ஆசிய அரசியல் பொருளாதார மீட்சிக்கு மட்டுமல்ல; உலக சமாதானப் பாதுகாப்புக்கும் அவசியம் என்பது அவராலும் இதர பேச்சாளர்களாலும் எடுத்து விளக்கப்பட்டது.

மகாபோதி சங்கப் பொதுக் காரியதரிசி டாக்டர் அரவிந்த குருவா பேசுகையில் "சங்கத்தின் சார்பில் கல்கத்தாவில் ஒரு "சர்வ ஆசிய கலாசார ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது" என்று தெரிவித்தார். இந்த ஸ்தாபனத்தில் பௌத்த நாடுகளின் நாகரீகத்தைப்பற்றிய விசேஷ கல்விக்கு ஏற்பாடு செய்யப்படும்.

அத்துடன் பழம் பெரும் நாளிலே பௌத்த சாஸதிர கலாமன்றமாய் விளங்கிய நாலந்தா பல்கலைக் கழகம் போன்ற புதியதோர் சர்வகலாசாலை சாரநாதில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேற்படி சர்வகலாசாலை நிறுவப்பட்டால் ஆசியாவின் அட்ட கோணங்களில் இருந்தும் மாணவர் வந்து குழுமி அறிவுபெற ஏதுவாகும் என்றும் அதற்கு பௌத்த தேசங்களெல்லாம் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் வேண்டினார்.

சாஞ்சி புதிய விகாரை

கொழும்பு, நவ. 11

சாஞ்சியில் புதிதாகக் கட்டப்படப்போகும் பௌத்த விகாரைக்கு டிஸம்பர் 27-ம் தேதி பௌர்ணமி தினத்தன்று அத்திவாரக்கல் நாட்டப்படும். எல்லா பௌத்த நாடுகளிலிருந்துப் பிரதிநிதிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புதிய விகாரையிலே பரிசுத்த புனித அஸ்திகள் (புத்தரின் சீடர்களது) வைக்கப்படும்.

பஸ் விபத்தில் காயமடைந்தார்

வழக்காளிக்கு ரூ 5000 நஷ்ட ஈடு

கொழும்பு, நவ. 11

பாணந்துறை பஸ் கம்பெனிக்குச் சொந்தமான எஸ்.ஏ. 7897 நம்பர் பஸஸுடன், கேகாலையைச் சேந்த திரு. கே. ஜி. சார்ள்ஸ் என்பவரினடபிள்யூ 1372 நம்பர் பஸஸுடன் 1943-ம் வருடம் ஏப்ரல் 5-ம் தேதி மோதுண்டதால், திரு. என். டபிள்யூ பெரேரா எனபவர் காயமடைந்தார். இவர் எக்ஸ் 7897 நம்பர் பஸஸில் பிரயாணம் செய்தவராகும். இது சம்பந்தமாக திரு கே. ஜி. சார்ள்ஸ் பாணந்துறை பஸ் கம்பெனி ஆகிய இருவர்மீதும் ரூ. 10,000 திற்கு நஷ்ட ஈடுகோரி ஒரு வழக்கை 1943 நவம்பர் மாதத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு கேகாலை நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டது. இப்பொழுது இவருடைய அபீல் வழக்கு நீதிபதி திரு. குட்ஸ். நீதிபதி திரு. கனகரத்தினா ஆகியோரால் விசாரணைக்கு எடுக்கப்பட்டு இருந்தது. விசாரணை முடிவில் வழக்காளிக்கு எதிரிகள் ரூ 5000 நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

ஆறுவது முறையும் 'கோரம்' இல்லை

கம்பளை அர்பன் சபைக்கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

கம்பளை, நவ. 11

கம்பளை அர்பன் சபையின் கூட்டம் சனிக்கிழமை நடைபெற வேண்டியிருந்தது ஆனால் போதிய அங்கத்தினர் கூட்டத்திற்கு வராததினால் ஆறுவது முறையாக கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இவ்விதம் அர்பன் சபையின் கூட்டம் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப் பட்டது இது ஆறுவது தடவையாகும். ஜூலை 24-ம் தேதி நடந்த மாதாந்தக் கூட்டத்தின் பின் அர்பன் சபைக் கூட்டம் நடைபெறவில்லையென்று கூறப்படுகிறது

சுதந்திர பாஷையில் முதலாவது அச்சு நூல்

தமிழிலேயே வெளியிடப் பட்டது

"தமிழுக்கு கத்தோலிக்கம் செய்த சேவை"

கொழும்பு. நவ. 12

"இந்தியாவில அச்சுக் கலையைப் புகுத்தியவர்கள் கத்தோலிக்க மத போதகர்களென்றும், முதன் முதலில் இந்திய பாஷையில் வெளியான அச்சடிக்கப்பட்ட புஸ்தகம் ஓர் தமிழ் புஸ்தகமே" என்றும் நேற்று அர்ச். பிலிப் நேரி தேவாலயப் புஸ்தக சாலையில் பேசிய சங்கைக்குரிய எக்ஸ். எஸ். தனி நாயகம் குறிப்பிட்டார்.

"தமிழ் இலக்கியத்துக்கு கத்தோலிக்க மதம் அளித்தவை" என்ற பொருள்பற்றி அவர் மேலும் பேசியதன் சாராம்சம் பின்வருமாறு:-

தமிழ்ப் பாஷை போல பல்வேறு மத நூல்களும் பரிமளிக்கும் பாஷை வேறெதுவுமில்லை; பௌத்தம், சமணம், வைஷ்ணவம், சைவம், இஸ்லாம், புரோட்டஸ்தாந்து மதம், கத்தோலிக்க மதம் யாவும் தமிழ் இலக்கியத்தை வளம்பெறச் செய்ய உதவி உள்ளன.

மலபாரத்தில் மத உபதேசம் செய்துவந்த அப்போஸ்தலரான அர்ச் தோமஸ் தமிழ்ப் பாஷை மூலம்தான் அதனைச் செய்திருக்க முடியும். சிரியன் கிறிஸ்தவர்கள் என்னும் மலையாளக் கிறிஸ்தவர்களின் கல்லறைகளில் தமிழே பொறிக்கப்பட்டிருக்கிறது ஆனால் தஸ்தாவேஜு சான்றுகள் அர்ச் பிரான்ஸிஸ் ஸேவியர் காலத்துக்குப் பின்பே கிடைக்கிறது

இந்தியாவில் கத்தோலிக்க மத போதகர்களே அச்சுக் கலையைப் புகுத்தினர். இந்திய பாஷையில முதலாவதாக அச்சடிக்கப்பட்ட புஸ்தகம் கத்தோலிக்க தர்ம சம்பந்தமான ஓர் தமிழ் நூலே. இது 16-நூற்றாண்டில் நடைபெற்றது. அதே நூற்றாண்டில் சேசு சங்கத்தைச் சேர்ந்த ஒருவரால் தூத்துக்குடியில் ஓர் தமிழ் சர்வகலாசாலை நிறுவப்பட்டது

அரிஸ் டோட்டலின் அரிட சிந்தனை முறை தமிழிலே புகுவதற்கும் 17-ம் 18-ம் நூற்றாண்டில் தொண்டு புரிந்த மத போதகர்களே காரணம். திராவிட பாஷை சம்பந்தமான ஆராய்ச்சி வசன நடையில் நூல்கள் ஆகியவற்றையும் அவர்களே ஆரம்பித்தனர் 200 ஆண்டுகளின் முன் இறந்த வீரமாமுனிவர் என்னும் பிதா பெஸ்கியே வர்கீலியர், தாந்தே, தாஸ்ஸோ முதலியோர் கருத்துகளைத் தமிழில புகுத்த ஆரம்பித்தவர்.

சமீப காலத்திலும் கூட திராவிட ஆராய்ச்சியில தலைசிறந்து விளங்கினோர் சுவாமி ஞானப்பிரகாசர், பிதா, ஹொராஷ ஆகிய கத்தோலிக்கர்களே.

கனடாவில் இருந்து வந்த அயிரை மீன்

உணவுக்கு ஏற்றதல்லவென வைத்தியர் தெரிவித்தார்

கொழும்பு, நவ. 12

கொழும்பு நகரிலே, பொது மக்கள் உபயோகத்துக்கு உதவாதவைகளென்று சுகாதார அதிகாரிகளினால் தடுக்கப்பட்ட அயிரை மீன்கள் விற்பனைக்கு வந்திருந்தன. இந்த மீன்கள் அக்டோபர் 10-ம் தேதி மான்ட்ரீலில் இருந்து வந்த 'ரொக்கைட்' என்னும் கப்பலில் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இக்கப்பலில் கானடாவில் உள்ள அயிரை மீன் தகரங்களில் அடைக்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருந்தன. முதலில் பரிசோதித்த ஒரு சுகாதார அதிகாரி தமக்கு அனுப்பப்பட்டிருந்த தகர மீன்களைப் பரிசோதித்து விட்டு அவை பொது மக்கள் உபயோகத்துக்கு ஏற்றதன்று தெரிவித்திருந்தார். ஆனால் நான்கு நாட்களின் பின் வேறு ஒரு வைத்திய அதிகாரி நகரிலுள்ள வர்த்தக இடங்களுக்கு விஜயம் செய்து சோதனை செயதார். பின்னர் இந்த தகர மீன்கள் உண்பதற்கு ஏற்றதல்லவென்று அவர் தெரிவித்தார். இதற்கிடையில் பெரும்பகுதி விலையாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

கப்பலில் இருந்து படுக்கை விரிப்புகளைத் திருடினர்

இருவருக்கு சிறையும் அபராதமும்

கொழும்பு, நவ. 12

எஸ் எஸ். சௌத்மூர் என்னும் கப்பலில் உள்ள எட்வர்ட்ஸகர் பீல்ட் என்பவர் நான்கு படுக்கை விரிப்புக்களை களவாடியதாக (ரூ.72 மதிப்புள்ளவை) கொழும்பு கோட்டை ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டார். விசாரணை முடிவில் கோர்ட் கலையும் வரை சிறையும் ரூ 75 அபராதமும் விதிக்கப்பட்டது.

இதே கப்பலில் உள்ள ஜேம்ஸ் மார்லி என்பவர் மூன்று படுக்கை விரிப்புகளைக் களவாடியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் அவருக்கு கோர்ட் கலையும் வரை சிறைத தண்டனையும் ரூ 50 அபராதமும் மாஜிஸ்டிரேட்டால் விதிக்கப்பட்டது.

கள்ளக் கையெழுத்திட்டு ஏமாற்றி பணம் பெற்றார்

எதிரிக்கு 18 மாத நன்னடத்தைப் பிணை

கொழும்பு, நவ. 12

கல்கிசையில் காலி ரஸதாவைச் சேர்ந்த திரு. எச். கே டொன் சந்திரசேகரா ஜெயசிங்கோ என்பவர் ரூ 343 சம்பந்தமாக மோசடி செய்து காரியாலயத்திலுள்ள சில கணக்குகளுக்கு கள்ள கையெழுத்திட்டதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் கோட்டை மாஜிஸ்டிரேட் எதிரியை 18 மாதத்துக்கு நன்னடத்தையுடன் நடக்க வேண்டுமென்றும் ரூ 250 ஜாமீனில் போகவேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

ஆயுதந் தாங்கிய காவற் படைகள்

சென்னை சர்க்கார் தீர்மானம்

சென்னை, நவ. 11

சென்னை சர்க்கார் 4 ஆயுதந் தாங்கிய காவற் படைகளை அமைப்பதென முடிவு செய்திருக்கின்றனர். வட சர்க்கார் ஜில்லாக்களுக்கு ஒரு படை, ஸீடெட் ஜில்லாக்களுக்கு ஒரு படை, சென்னைக்கு ஒரு படை, திருச்சிக்கு ஒரு படை ஆகிய நாலு படைகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மோட்டார் விபத்து வழக்கு

டிரைவர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 12

கொள்ளுப்பிட்டியில் அல்பர்ட் பிளேஸ் சந்தியில் நவம்பர் 2-ம் தேதி நடந்த கார் விபத்தில் தெகிவளையைச் சேர்ந்த டாக்டர் ஈ. எல். மோகன் டயஸ் கொல்லப்பட்டது சம்பந்தமாக கோட்டை ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு அந்த விபத்தில் சம்பந்தப்பட்ட காரின் டிரைவர் எம். ஸி. முகம்மது சலாஹுதீன் மீது தாக்கல் செய்யப்பட்டது. எதிரியை ரூ 500 பணையில் போகுமாறு நீதிபதி விடுத்ததார் மேலும் விபத்தில் சம்பந்தப்பட்ட காரை அதன் சொந்தக்காரர் கோர்ட்டில தேவைப்படும் போது கொண்டுவர வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது காரின் சொந்தக்காரர் அதற்கு ரூ 500 பிணை கொடுத்து காரை எடுத்துச்சென்றார்.

கைமோசக் கொலைக்கு மாணவனுக்கு சிறை

களுத்துறை, நவ 12

களுத்துறை பகுதியிலுள்ள சாமுவேல் டி அல்விஸ் குணவர்தனு என்னும் மத்துமா மகாத்மயா என்பவரும் அவருடைய மகன் நால்வரும் ஹலவெலா விதானை வி. டி. ஹண்டி என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு களுத்துறை அசைஸ கோர்ட்டில் நீதிபதி திரு விஜயவர்தனு முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் போது இரண்டாவது எதிரியான உபதிஸா என்பவர் (முதல் எதிரி சாமுவேல் டி அல்விஸ் குணவர்தனுவின் மகன்) கைமோசக் கொலை புரிந்ததாக ஒப்புக் கொண்டார். இவர் ஒரு மாணவர் என்று கூறப்படுகிறது. மாஜிஸ்டிரேட் உபதிஸாவுக்கு இரண்டு மாதச் சிறைத்தண்டனையும் ரூ 500 அபராதமும் விதித்தார் மற்றும் நான்கு எதிரிகளும் விடுதலைசெயயப்பட்டனர்.

மாத்தறை, நவ, 12

வெலிகம அர்பன் சபையின் மாதாந்தக் கூட்டம் சனிக்கிழமை நடைபெறவில்லை. இக்கூட்டத்துக்கு தலைவர் உட்பட ஒரு அங்கத்தவரும் வரவில்லை.

தொப்பி களவாடினராம்

தண்டனை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ. 12

கொட்டாஞ்சேனை கொச்சிக்கடையைச் சேர்ந்த எச். அல்பர்ட் பெரேரா என்பவர் கொழும்பு அட்வகேட் திரு. வி. ஈ. சரவணமுத்து என்பவரின் ரூ. 40 மதிப்புள்ள ஒரு தொப்பியை திருடியதாக குற்றம் சாட்டிகொண்டு வரப்பட்ட வழக்கு கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. தண்டனை அளிக்கப்படுவது 15-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அரசியல் புரட்சியாளர் சேவை முடிந்துவிட்டது

இனி மக்களின் நலம் அதிகாரிகள் கையில்

பத்திரிகைகளுக்கு ராஜாஜி புத்திமதி

சென்னை, நவ. 11

ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் 'லைவ்தந்திரா' வருஷமலரில் எழுதியுள்ள கட்டுரையில் அரசியல் புரடசியாளர்கள் வேலைகள் முடிவடைந்து விட்டனவென்றும், அதிகாரிகள் வசமே மக்களின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறதென்றும் கூறியிருக்கிறார். அக்கட்டுரையில் அவர் எழுதியுள்ளதின் சாராம்சமாவது:-

அதிகாரிகள் யோக்கியமாக காரியத்தை கவனித்துச் செய்ய வேண்டியதே இப்பொழுதுள்ள உடனடியான தேவை நமக்கு வேண்டியதெல்லாம் சுறுசுறுப்புள்ள காரியத்தை நடத்திமுடிப்பதிலே கண்ணுள்ள பொது ஜன அதிகாரிகளதான். அதிகாரிகள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் உணரும்படி பத்திரிகைகள் உத்ஸாகமூட்டியும் வற்புறுத்தியும் சேவை செய்யவேண்டும். பத்திரிகைகளில் எழுதுவதை ஜனங்கள் படிக்கிறார்கள். அதனால் ஏற்படும் சகதியை அதிகாரிகள் தாங்க முடியாமல் போகும். ஆகவே பொறுப்புடன் எழுதும்படி அவர் பத்திரிகாசிரியர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மந்திரிகளை குறை சொல்ல வேண்டாம் என்றும அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தொழில் இலாகாவுக்கு புதிய காரியாலயம்

கொழும்பு, நவ 12

கால்பேஸ் பகுதியில் ஆர். ஏ. எப். படையினர் முன் தங்கியிருந்த கட்டிடத்தில தொழிற் கமிஷனர் இலாகா இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. இந்த இலாகா இப்பொழுது சர்க்கார் காரியாலயக்கட்டிடத்திலிருந்து இந்த புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. தொழில் மந்திரியின் நிரந்தர காரியதரிசி இப்பொழுது தற்காலிக தொழிற் கமிஷனராக கடமையாற்றி வருகிறார்.

இலங்கை சோனகர் வாலிபர் சங்கம்

காத்தான்குடி, நவ. 11

காத்தான்குடி இலங்கைச் சோனகர் வாலிபர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் தலைவர் எம். காஸ் முகம்மது தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் நாட்டில் கள்வர் பயத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்குப் பொதுமக்கள் சங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமெனப் பேசப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூருக்கு மேலும் 4500 இலங்கையர்

ராயல் பயனியர் படைக்கு அதிக ஆட்கள் வேண்டும்

கொழும்பு, நவ. 12

சிங்கப்பூருக்கு அனுப்பப்படுவதற்கு ராயல் பயனியர் படைக்கு இலங்கையிலிருந்து ஏற்கெனவே அநேகர் தெரியப்பட்டிருந்தனர். இப்பொழுது மேலும் சுமார் 4500 இலங்கையர் தேவையென்று இலங்கை துருப்புகள் முகாம் அதிகாரி தெரிவித்துள்ளார். இதற்காக இப்பொழுது முதல் 1948 மார்ச்சு மாதம் முடியும் வரை ராயல் பயனியர் படைக்கு (இலங்கை) ஆள் சிரட்டப்படும் என்று கூறப்படுகிறது. இலங்கை ராணுவ போலீஸ் படையின் முதல் பகுதிக்கு ஆட்கள் ஏடுக்கப்படுவது முடிவடைந்தவிட்டது. இவர்களில் ஒரு பகுதி முன் மலாயா சென்றுள்ளது. இதில் கடைசி பகுதியினரும் இம்மாத முடிவில் மலாயா செல்வார்கள் என்று தெரிகிறது.

தொழிலாளர்களுள் பேதமில்லை!

பெல்மதுளையில் பொதுக் கூட்டம்

பெல்மதுளை, நவ 10

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பெல்மதுளை ரெஸ்ட் ஹவுஸ் மைதானத்தில் திரு ஜி. ஆர். மோத்தா அவர்கள் தலைமையில் இரத்தினபுரி "பாம்காடன்" குரூப் வேக் நிறுத்தத்தை ஆதரித்து இ. தொ. கா. தொழிலாளரடங்கிய ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் செனட்டர் திரு பெரி சுந்தரம், தொழிற் சங்க பொதுக்காரியதரிசி திரு கே. இராஜலிங்கம், தொழிற் சங்கப் பிரசிநிதிகளான திரு ஜே. ஜே. எம். தங்காஜ் திரு கே. வி. நாயுடு முதலியோர் பிரதம பேச்சாளராயிருந்தனர்.

தலைவர் திரு. ஜி. ஆர். மோத்தா அவர்கள் "பாம்காடன்" குரூப் தொழிலாளரின் வேக் நிறுத்தத்தின் காரணத்தை விபரமாய் எடுத்துக் கூறினார். செனட்டர் திரு. பெரி சுந்தரம் அவர்கள் இப்போராட்டத்திலே தொழிலாளரெல்லோரும் ஜாதி சமய பாகுபாடின்றி ஒத்துழைத்துத் தொழிலாளரின் நியாயமான உரிமைகளைப் பெற முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். திரு. இராஜலிங்கம் அவர்கள் அடுத்து வரும் தீபாவளிப் பண்டிகையிலுள்ள அநாவசியச் செலவைச் சுருக்கி வேலை நிறுத்தக்காரருக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். திரு தங்கராஜ அவர்கள் கடந்த காலங்களிலே இரத்தினபுரி பகுதித் துரைமார் செய்து வந்த அநியாய அட்டூழியங்களையும் தான் தோன்றி நடவடிக்கைகளையும் விபரமாய் எடுத்துரைத்து அநியாய, அக்கிரமங்களைச் செய்யும் இந்த வெள்ளையர்களை விரட்டித் துரத்த தொழிலாளர் உருக்கி வார்த்த இரும்புபோல் ஒற்றுமைப்பட வேண்டுமெனக் கூறினர். பின்னர் திரு. நாயுடு, எஸ். கே. நாயர் முதலியோர் பேசினர்.

காரியாலயத்திலிருந்து ரூ. 2951 களவு

காரியாலய சிப்பந்திக்கு ரிமாண்டு

கொழும்பு, நவ. 11

புறக்கோட்டை கெய்ஸர் வீதியைச் சேர்ந்த திரு. வி. எச். டி. அல்விஸ என்பவர் தமது காரியாலயத்தில் ரூ. 2951 வைத்திருந்ததாகவும் அது காணப்படவில்லையென்றும் போலிசாருக்குத் தெரிவித்தார்.

சந்தேகத்தின் மேல் காரியாலய சிப்பந்தி டொன் சாம்சன் என்பவரைப் போலிசார் கைது செய்தனர். பணம் கொடையைச் சேர்ந்த பி பாடின் நோனா என்பவர் வீட்டில் இருந்து ரூ 2915 எடுக்கப்பட்டு விட்டது. சம்சன் 13-ம் தேதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சிங்களப் பத்திரிகைகள் கூறுவதென்ன?

விளம்பரத்தால் விவசாயம் பெருகுமா?

ஏழை இலங்கையின் நிர்வாகப் போக்கு!

உலக மகாநாட்டுக்கு ஒவ்வாத பிரதிநிதிகள் நியமனம்

நேற்று முன்தினம் மாலை வெளிவந்த "லங்கா தீப" என்னும் சிங்களப் பத்திரிகையில் "ராஜமுரரி" எழுதியதின் சுருக்கம்:

"குருதேவரே! உபாயமென்றால் என்ன? அர்த்தமில்லையா-பலனில்லையா? எவ்வளவோ பிரயாசமான தங்களின் உபதேசங்களினால் பலனுமில்லை - முடிவுமில்லை' என்று சுலனி அரசன் தன் குருவினிடம் கூறினானாம். எமது அரசாங்கம்தான் நம்தேச முழுவதும் பெரிய விவசாய இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக செய்தி வந்ததும் மேற்படி அரசனின் விஷயம் எமக்கு ஞாபகம் வருகிறது. மிளகாய் உற்பத்தியை கைப்பற்றுவதற்கு குருதேவர் ஒரு உபாயத்தைச் செய்தார். அது தவறி விட்டது. இன்னொரு உபாயத்தைச் செய்தார், அதுவும் தவறி விட்டது; மற்றுமொரு உபாயத்தைச் செய்தார், அதுவும் தவறிவிட்டது. எனினும் அவரின் உபாயங்களுக்கோ ஒரு முடிவையும் காணாத அரசன் மேற்படி கேள்வியைக் கேட்டான்.

இலங்கை மக்களை பஞ்சப் பிணியினின்றும் காப்பாற்றுவதற்காக எமது அரசாங்கம் எத்தனையோ முறைகளைக் கைகண்டு பார்த்தார்கள்; கோடிக்கணக்காக செலவு செய்து பாலை நிலத்தை சாகுபடி செய்து பார்த்தார்கள்; நீர்ப்பாசன திட்டங்களை அமைத்தார்கள்; - சீர்திருத்தினார்கள்; சிலம் பங்கிட்டுக் கொடுத்தார்கள்; அவசிய விவசாயப் பட்டாளத்தை நிறுவினார்கள் மிகைப்படுத்துவானேன்? 60 லட்சம் பேருக்கு பசியாற்ற "பேனைக் கொண்டு கல்லைத் தூக்குவது"போல் பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டுமவிவசாயம் செய்வித்துப் பார்த்தார்கள்.

மேலும், விவசாய இயக்கங்களை நடத்தக் கூடிய மிகவும் அலங்காரமான பல நிறங்களையுடைய சுவரொட்டி விளம்பரங்களை உபயோகித்தார்கள்; ருசிகாமான அறிக்கைகளை வெளியிட்டார்கள்; பல புஸ்தகங்களையும் பிரசுரித்தார்கள்; பத்திரிகை நிருபர்களை விவசாயப் பண்ணைகளுக்கு அழைத்துசென்று அவர்களைக் கொண்டு சிரேஷ்டமாக வர்ணிக்கச் செய்வித்தார்கள். உழுகிற - தொளி கலக்குகிற - அறுகுவெட்டுகிற உற்சவங்களை படம்பிடித்துபிரசுரம்செய்தார்கள் எனினும் என்னசெய்வது? பார் செய்த பாவமோ தெரியாது — துரதிஷ்டவசமாக எந்த வழியிலும் மக்களின் பசி ஆறியபாடில்லை.

1940-ம் வருடத்திலிருந்து இன்னும் பசியில்தான் மக்கள் வாடுகிறார்கள். முன்னிருந்ததிலும் பார்க்க மெத்த பசி! 1830-ம் வருடத்திலிருந்ததிலும் பார்க்க அதிகப் பசி! ஆனபடியால் இன்னும் விவசாயத்தைப் பற்றி என்னவெல்லாமோ சொல்லுகையில் ஏழைமக்கள் நடுநடுங்குகிறார்கள் ஏன்? எங்கள் விவசாய இயக்கமானது கௌரவத்திற்கு யானை வளர்ப்பது போன்று செலவுக்குத் தகுந்த பலன் எள்ளளவும் இல்லாதபடியால்தான்.

போனவை போகட்டும்! விவசாயிகள் "கட்டுப் போறை" (எலும்பு உரம்) யின்றி திண்டாடுகிறார்கள். பணமுள்ளவர்கள் அந்தர் 40 ரூபாய் வீதம் வாங்கியாவது காரியத்தை செய்வார்கள். விவசாயத்தின் மீது உயிர் கொடுக்க பறைசாற்றுகிற அரசாங்கம் விவசாயிகளுக்கு உரமாவது கொடுக்கக் கூடாதா? எனினும் அரசாங்கத்திற்கு ஒரு நன்மையுண்டு. அதாவது நீங்கள் எப்படியாவது பயிர் செய்யுங்கள் காரியமில்லை சாகுபடியில் ஏக்கருக்கு 2 புசல் வீதம் நெல்லு வரி மாத்திரம் செலுத்தி விட வேண்டும் என்பதாம். இந்த நேக்கம் "யாரிடமாவது வயிற்றுப் பாட்டைப் பார்த்து வாருங்கள் என்னை தகப்பன் என்று மாத்திரம் சொல்லுங்கள்," என்ற இழிவான போக்கிற்கு சமானமாய் இருக்கிறது. எப்படியாவது 2 புசல் நெல் (வரி) கொடுக்கத் தவறினால் அடுத்தபடி சிறைத்தண்டனைதான்!

இவையெல்லாவற்றையும் யோசித்துப் பாருங்கள்! உணவுப் பொருட்களை சுலபமாக்குவதற்கென்று, இலங்கையை எத்தனை தேசங்களுக்கு அடிமையாக்கி இருக்கிறார்கள்? எத்தனை தேசங்களில் புதிய மார்க்கெட்டுகளை திறந்திருக்கிறார்கள்? முன்னெல்லாம் மனித உபயோகத்திற்கு தகாதென்று தள்ளுபடியான உணவுப்பொருட்கள் இப்பொழுது விட்டமின்-பொருட்டின் அதிகம் இருப்பதாக பிரசாரம் செய்து எங்களை அவற்றை உண்ணச் செய்வித்தார்கள். எப்படியும் பொதுமக்கள் காலம் கடத்துகிறார்கள், இந்நிலையில் இவர்களுக்கே அரசாங்கம் நன்றிசெலுத்த கடமைப்பட்டிருக்கிறது.

எல்லா குற்றங்களையும் யுத்தத்தின் மீது சாட்டிவிட்டு கௌரவத்தோடு, மென்மேலும் அதிகாரத்தில் இருக்கப் பார்க்கிறார்கள். இப்படியெல்லாம் இலங்கை மக்கள் பட்டினி இருப்பதற்கு யாருக்கு-என்ன குற்றம் செய்தார்கள்? எல்லாம் குடும்ப ஆதிக்கத்தின் பிரதிபலன்தான்.

யூ. என் பி. அரசாங்கத்தின் போக்கு!

இம்மாதக் கடைசியில் கியூபாவில் நடக்கும் வர்த்தக மகாநாட்டிற்கு இலங்கைப் பிரதிநிதியாக திரு. பொன்னம்பலத்தோடு போட்டியிட்டு படுதோல்வியடைந்த திரு. ஏ. மகாதேவாவை யூ. என். பி. அரசாங்கம் தெரிந்தெடுத்திருக்கிறது. இதைப்பற்றி பார்லிமெண்டில் எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறாதது பெரிய ஆச்சரியம்; இதிலும் பார்க்க ஆச்சரியம் பொது மக்களை பணத்தில் செலவு செய்யப்படும் இந்த தூதுக்கு தேர்தலில் படுதோல்வியடைந்தவரை விட வேறொருவரையும் இலங்கையில் தேட முடியாமல் போனதுதான். இதற்குக் காரணம் தகுந்த-திறமையுடையவர் இருந்தபோதிலும் அவர் யூ. என் பி யாய் இல்லாததுதான். இந்த தூது கோஷ்டிக்கு காரியதரிசியாக திரு. ஏ. மகாதேவாவின் மகன் பி மகாதேவா நியமிக்கப்பட்டிருக்கிறார் எப்படியிருக்கிறது தகப்பன்-மகன் பதவிப் பொறுப்பின் லட்சணம்?

(9-11-47-ஹெலதிவ)

"பீயர்" குடி விற்றவருக்கு ரூ. 200 அபராதம்

திரிகோணமலை, நவ. 8

சென்ற 6-ம் திகதி ஓயில்மாகர் தெருவிலிருக்கும் நியூவயின் ஸ்டோரில் சே. அருநெல்ன் என்பவர் சட்டவிரோதமாய் லைசன்ஸ் இல்லாமல் பீயர் விற்றதாகக் குற்றஞ்சாட்டிக் கலால் இன்ஸ்பெக்டர் திரு ஜெ. டபிள்யூ. ஜமொடர் அவர்களால் தொடரப்பட்ட வழக்கு இன்று மாஜிஸ்டிரேட் திரு ரோலன்டி செய்சா அவர்களால விசாரணை கெடுத்துக்கொள்ளப்பட்டுமுடிவில் மாஜிஸ்டிரேட் எதிரியை குற்றவாளி யெனக் கண்டு ரூ. 200 அபராதம் விதித்தார்.

(ந-நி)

பொது மக்களிடையே க்ஷய ரோக பரீட்சை

பிரிட்டனிலிருந்து ரேடியோ போட்டோ இயந்திரம்

கொழும்பு, நவ. 12

க்ஷயரோக வியாதியஸ்தர்களை சம்பந்தமாக அரசாங்கம் பலவித நடவடிக்கைகளை எடுத்துள்ளது இப்பொழுது இலங்கையிலுள்ள பொது மக்களெல்லோரையும் பரிசோதித்தறியக்கூடியதாக திறமையான ரேடியோ போட்டோ எடுக்கும் இயந்திர தளபாடங்கள் பிரிட்டனில் இருந்து தருவிக்கப்படுகின்றன, வைத்திய சுகாதார இலாகாவே இவற்றை தருவிக்கின்றது. இந்த ரேடியோ போட்டோ இயந்திரம் சுலபமாக கொண்டு செல்லக்கூடியதென்றும் பணிக்கு 10 முதல் 120 பேர்களை பரிசோதிக்க முடியுமென்றும் கூறப்படுகிறது. விரைவில் கொழும்பு வந்து சேருமென்றுஎதிர் பார்க்கப்படுகிறது.

நான்கு புதிய முத்திரைகள்

25-ம் தேதி முதல் அமுலுக்கு வரும்

கொழும்பு, நவ. 12

புதிய அரசியல் திட்ட அங்குரார்ப்பணத்தைக் குறிப்பதற்கு நான்கு புதிய முத்திரைகள் (6 சதம், 10 சதம், 15 சதம் 25 சதம்) அமுலுக்குக்கொண்டு வரப்பட இருந்தன ஆனால் கால தாமதம் ஏற்பட்டதால் இன்ன தேதியில்தான் அவை அமுலுக்கு வருகின்றனவென்பது வெளியிடப்படவில்லை. இப்பொழுது 25-ம் தேதி பாராளுமன்றம் கூடும் தினத்தையொட்டி நிச்சயமாக அந்த நான்கு புதிய முத்திரைகளும் அமுலுக்கு வருமென வருமான வரி கமிஷனர் திரு டி. டபிள்யூ. ராஜபத்திரான தெரிவிக்கிறார். இச்செனத்தன்று எல்லா தபாற் கந்தோர்களிலும் இந்த நான்கு புதிய முத்திரைகளும் விக்கிக் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

வரிமறிந்த ரூ. 12,000 கொள்ளை

ஆறுபேர்களுக்கு ரிமாண்டு; ரூ 5392 திரும்ப எடுக்கப்பட்டது

கொழும்பு, நவ. 11

களுத்துறை லோகன் எஸ்டேட் சுப்பிரின்டென் திரு பார்ஹார்ஸன் என்பவரிடம் வரி மறித்து ரூ. 12,000 கொள்ளையடிக்கப்பட்ட செய்தி முன்னெவெளியிடப் பட்டுள்ளது. கொள்ளையடிக்கப்பட்ட இப்பணத்தில் ரூ. 5392 போலிஸாரால் திரும்ப எடுக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது.

இந்தக் கொள்ளை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட ஆறு பேர்களை போலிஸார் மத்துகம கார்ட்டில் ஆஜர் செய்தனர் அவர்களை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

விவசாய மந்திரிக்கு விவசாயிகள் சங்க மகஜர்

வெள்ளத்தினால்பாதிக்கப்பட்டோருக்கு உதவி வேண்டுமாம்

யாழ்ப்பாணம், நவ. 11

சங்கானை விவசாயிகள் சங்கத்தின் கூட்டத்தில் அக்டோபர் 18-20-ம் தேதிகளில் நடந்த வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நஷ்டத்தை ஈடுகட்டும்படி ஒரு விசேஷ கமிட்டி தெரியப்பட்டிருந்தது. இக்கமிட்டி இப்பொழுது விவசாய மந்திரிக்கு விபரமாக ஒரு மகஜர் அனுப்பியுள்ளது. அதில் விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும், விதை நெல்லு முதலியன இலவசமாக கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரலில்நடைபெற்ற ஏ. எம். ஐ. ஸி ஈ பரீட்சையில் ஏ பகுதியில் கொக்குவில் கிழக்கைச்சேர்ந்த திரு. வி. குலசிங்கம் சித்தியடைந்துள்ளார் என்று அறியப்படுகிறது.

மேற்கு ஐரோப்பாவுக்கு இடைக்கால உதவி!

அமெரிக்காவில் நீக்ரோ துவேஷம்

கிரேக்க கம்யூனிஸ்டுகள் தலை கொய்யப்படுகின்றன

வாஷிங்டன், நவ 10

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவிசெய்ய அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி மார்ஷல் வகுத்துள்ள திட்டம் இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருந்து 1948 மார்ச்சு மாதம் வரை பிரான்ஸ, இத்தாலி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு இடைக்கால உதவி செய்ய 59 கோடி 70 லட்சம் டாலர் அனுமதிக்கப்படும் இதற்கு அமெரிக்க காங்கிரஸ அனுமதி அளிக்க வேண்டும், காங்கிரஸ் அடுத்த திங்கட்கிழமை கூடும்போது மார்ஷல் தனது திட்டத்தை சமர்ப்பிப்பார். 1948 ஏப்ரல் மாதம் முதல் நீண்ட கால உதவிக்கு 200 கோடி டாலர் அனுமதிக்கப்படும். இது சம்பந்தமாக இன்று மார்ஷல் அமெரிக்க செனட சபை, காங்கிரஸ அந்நிய நாட்டுக் கமிட்டி இவைகளின் கூட்டுச் சட்டத்தில் எடுத்துச் சொன்னார். இவ்வுதவி சம்பந்தமாக அமெரிக்கா 16 மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் தனித்தனி ஒப்பந்தம் செய்து கொள்ளும்.

சீன சர்க்காருக்கு உதவிசெய்யவும் அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது. இது சம்பந்தமாக மார்ஷலின் இரண்டாவது திட்டம் கூடியசீக்கிரம் வெளிவரும்.

கிரீஸில் கோரச் செயல்கள்

லண்டன், நவ. 10

கிரீஸில் மிக்க கோரச் சம்பவங்கள் நடைபெறுவதாகவும், அங்கு சிரேக்க குதிரை வீரர்கள் கம்யூனிஸ்டுகளின் தலைகளைக் கொய்து கையில் பிடித்துக் கொண்டு செல்கிறார்கள் என்றும் இப்படிப்பட்ட கோர நாட்டில் பிரிட்டிஷ் துருப்புகளை வைத்திருக்கலாகாதென்றும் 'டெயிலி மிரர்' பத்திரிகையில் படங்களுடன் ஓர் கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது 8 ஆண்கள் ஒரு பெண் ஆகிய 9 கம்யூனிஸ்டுகளின் தலைகள் கொய்யப்பட்டு பகிரங்கமாக வைகள் கையில் எடுத்துச் செல்லப்பட்டன. இச்செயல் மிருகளிடுகள் மீது அனுதாபமில்லாதவர்களைக் கூட கம்யூனிஸ்டுகள்மீது அனுதாபம் கொள்ளும்படி செய்து விடும்.

அமெரிக்காவில் நீக்ரோ துவேஷம்

லண்டன், நவ. 10

'டெயிலி மிரர்' பத்திரிகையில் அமெரிக்காவில் வெள்ளையர்களிடையே நீக்ரோகள் மீது இருந்துவரும் துவேஷத்தைக் குறித்து அப்பத்திரிகையின் அமெரிக்க நிருபர் ஓர் கட்டுரை எழுதியிருக்கிறார். சென்ற 10 வருடங்களில் 43 நீக்ரோக்களை அமெரிக்க வெள்ளையர்கள் உயிருடன் தோலுரித்து சித்திரவதை செய்து பகிரங்கமாகக் கொலைபுரிந்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு விமானப் போக்குவரத்து

பொதுமக்களுக்கு அட்டவணை விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கும் 20-ம் தேதி வியாழக்கிழமை முதல் விமானப் போக்குவரத்து நடைபெறும். யாழ்ப்பாணத்துக்கு தினசரி விமானப் போக்குவரத்து இருக்கும் வாரத்தில் மூன்று நாட்களுக்கு சிறுச்சிறுப் பள்ளிக்கும் சென்னைக்கும் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு விமானம் செல்லும். மதுரையும் விரைவில் இதற்குள் சேர்க்கப்படும். இதுபற்றிய விவரமான அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்படும்.

வடக்கே காங்கேசன்துறை தொகுதியிலுள்ள பலாலியே விமான நிலையமாக இருக்கும். யாழ்ப்பாணம் விக்டோரியா வீதி 11-ம் நம்பரில் இருந்து பிரயாணிகள் பலாலி விமான நிலையத்துக்கு ஏற்றிச் செல்லப்படுவர்.

வருடத்தில் தென்னிந்தியாவிலுள்ள அலயங்களிஷ் உற்சவங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் அநேகர் தனிஸ்கோடியில் அதிக கஷ்டப்படுகின்றனர். இந்த விமான போக்குவரத்து தொடர்பு அவர்களால் வெகுவாக வரவேற்கப்படுகிறது. இப்பொழுது 24 மணி நேரத்தின்பின் கிடைக்கும் தபால் மெயில் யாழ்ப்பாணத்திற்கு வெகு முன்னதாக கிடைத்துவிடும். விமான போக்குவரத்து பகுதி டைரக்டர் விபரமான விமான போக்குவரத்து அட்டவணையை விரைவில வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50

இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,

85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எஸ். கே. ஷேக் முகம்மது,

பிரதர்ஸ் (மரைக்கார் கடை)

பூக்குளம் பார்க்கிற்கு எதிரே

திருச்சினாப்பள்ளி.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருகின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூச் அன் கோ.,

மலிபான் தெரு,

போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

பீடிச் சக்கரவர்த்தி.

த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயாமில் உள்நாட்டு சச்சரவு!

தப்பியோடிய பிரதம மந்திரியைக் கைது செய்ய உத்தரவு

புதிய அரசாங்கம் ஏற்பட்டதும் பதுக்கப்பட்ட அரிசி வெளியேறுகிறது

பாங்காக், நவ. 11

இன்று சயாமில் சயாம் ராணுவப் படைகளுக்கும் புதிய சாககாரை எதிர்க்கும் கட்சியைச் சேர்ந்த படையினருக்கும் போர் நிகழ்வதாகச் செய்தி லப்படுகிறது. 24 மணி நேரத்திற்குள் அணி வகுத்து யுத்தத்துக்குச் செல்ல தயாராக இருக்கும்படி எல்லா ராணுவ ஸ்தலங்களுக்கும் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்தனர். இத்தகவலை புதிய சர்ககாரின் உதவி பிரதம தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் பின் சுன் ஹவான் தெரிவித்தார். ஆனால் போர் எந்த இடத்தில் நடைபெறுகிறதென்பது தெரிவிக்கப்படவில்லை. ராணுவ ஸ்தலங்களில் ராணுவப் படையினருக்கிடையே கலகம் நடைபெறவில்லை யென்று ராணுவப் பிரதிநிதி யொருவர் தெரிவித்தார். திடீர் புரட்சிக்குப் பின் பழைய அரசாங்கம் கைப்பற்றப்பட்ட 48 மணி நேரத்திற்குள் சயாமில் புதுத்தச் செய்தி கிளம்பியிருக்கிறது.

பழைய பிரதம மந்திரி நவ ஸவதனும் ஜப்பானை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த தலைவர் பனம் யாங்கும் கப்பலில் மறைந்து கொண்டிருக்கிறார்கள். கடற்படை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புரட்சியில் கலந்து கொள்ளவில்லை பழைய பிரதம மந்திரி நவளவதனையும் பனம்யாங்கையும் மற்றும் இரு மந்திரிகளையும் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதும் பதுக்கப்பட்டிருந்த அரிசி இருப்பு வெளிவருகின்றது. பாங்காக்குக்கும் தொங்குசிக்குமிடையேயிருந்த அரிசி ஏற்றுமதித் தடை ரத்து செய்யப்பட்டது. ஜவுளி விலை குறைந்து வருகிறது.

தளபதி சங்க்ராம் அறிக்கை

தளபதி சங்க்ராம் கீழ்கண்ட அறிக்கை விடுத்துள்ளார்:-

ஜனங்கள் அரசாங்கத்தில் மாறுதலை விரும்பியதன் காரணமாக ராணுவ நடவடிக்கை மூலம் புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய அரசாங்கம் மன்னருக்கு அதிக அதிகாரம் அளித்திருக்கிறது. பழைய அரசாங்கம் ஜனநாயக ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றது நாட்டின் பொருளாதார நிலையை உறுதிப்படுத்தவும், முக்கியமாக அரிசி வர்த்தக நிலையை சரிப்படுத்தவும், அதில் நடைபெறும் களவர்த்தகத்தையும் மற்ற ஊழல்களையும் ஒழிக்கவுமே புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.

1946 ஜூன் மாதம் துப்பாக்கி காயத்துடன் அரண்மனையில் மாஜி மன்னர் ஆனந்த இறந்து கிடந்தது சம்பந்தமாக மீண்டும் விசாரணை தொடங்கப்படும். மன்னர் எவ்வித காரணத்தால் இறந்தார் என்பது கண்டுபிடிக்கப்படும்.

சயாம் முதல் சட்டசபைக்கு கூடிய சீக்கிரம் தேர்தல் நடைபெறும். இரண்டாவது சட்டசபை அங்கத்தினர்களை மன்னரே நியமிப்பார்.

சனிக்கிழமை கைதியான சில மந்திரிகள் விடுதலை செய்யப்பட்டனர். சிலர் தத்தம் வீடுகளிலேயே சிறையிருக்கின்றனர். பத்திரிகைச் செய்திகள் தணிக்கை செய்யப்படமாட்டாது. என்றும் ஆனால் நிருபர்கள் புதிய அரசாங்கத்தின் மீது துவேஷமுண்டாக்கும் பிரசாரச் செய்திகளை அனுப்பலாகாதென்றும் புதிய அரசாங்க தகவல் மந்திரி தெரிவித்தார்.

பாங்காக்கிலுள்ள அந்நிய நாட்டுஸ்தானிகர்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க மறுத்து நிலைமையை கவனித்துக்கொண்டு வருகிறார்கள்.

சிங்கப்பூரில் தகவல்

சிங்கப்பூர், நவ. 11

பிரிட்டிஷ் விமான நிலையமூலம் சயாமிலிருந்து இங்குவந்துள்ள பிரயாணிகள், பழைய சயாம் பிரதம மந்திரி நவளவத் தப்பிவோடிய பின் பாங்காக்கிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கின்றனர்.

சீன சர்க்கார் கவலை

நாங்கிங், நவ. 11

சீன சர்க்கார் அந்நியநாட்டு மந்திரி டாக்டர் வாங் ஷி சீ நாங்கிங் நகரிலுள்ள சயாம் ஸ்தானிகரைச் சந்தித்து சயாம் நிலையைக் குறித்து இன்று கலந்து பேசினார்.

சயாமிலுள்ள சீனர்கள் நிலை அமைதியாக இருப்பதாக இங்கு செய்தி கிடைத்துள்ளது.

லார்டு சபை மசோதா நிறைவேறியது

சோம்பேறிகளுக்கு கட்டாய சேவை

இடைக்கால வரவு செலவு திட்டம்

லண்டன், நவ. 11

பிரிட்டிஷ் சர்க்கார் கொண்டுவரும் சட்டங்களை இரண்டு வருட காலம் வரை தாமதப்படுத்த லார்டு சபைக்குள்ள அதிகாரத்தை மோதகால அளவாகக் குறைக்க கொண்டுவரப்பட்ட சர்க்கார் மசோதா நேற்றிரவு காமன்ஸ் சபையில் நிறைவேறியது. அதற்கு ஆதரவாக 345 வோட்டுகளும் பாதகமாக 194 வோட்டுகளும் கிடைத்தன.

ஜலதோஷத்தால் பீடிக்கப்பட்டிருந்த ஹர்க்கட்சித் தலைவர் சர்ச்சில் மசோதாவின் இரண்டாவது நாள் விவாதத்தின் போது காமன்ஸ் சபையில் ஆஜராகி மசோதாவை டலமாக எதிர்த்துப் பேசினார். யுத்தகால பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாக இருந்த திரு ஈடனும் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினார். அட்லி பதிலளித்துப் பேசிய பின் மசோதா வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

சோம்பேறித் தடை மசோதா

சூதாட்டங்கள் சம்பந்தமான உத்தேச பந்து விளையாட்டுச் சூதாட்டங்கள், இரவுச் சங்கங்கள், தெருக்களில் சுற்றி சாமான் விற்பவர்கள் முதலியவர்களை முக்கியமான கைத்தொழில்களில் கட்டாய சேவையிலீடுபடுத்துவதற்காக இன்று பிரிட்டிஷ் சர்க்கார் செய்துள்ள ஓர் உத்தரவு காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

18 வயதுக்கு மேல் 51 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கும் 18 வயதுக்கு மேல் 41 வயதுக்குட்பட்ட பெண்களுக்கும் இந்த உத்தரவு அமுல் செய்யப்படும்.

இடைக்கால வரவு செலவுத் திட்டம்

பொக்கிஷ மந்திரி டால்டன் இன்று பிரிட்டிஷ் மந்திரி சபையில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். நாளை இத்திட்டம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும். ஜனங்கள் பணத்தை அதிகமாகச் செலவழியாது சிக்கனம் செய்வதற்கு அநுகூலமாக இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. போகப் பொருள்கள்மீது அதிகமான கொள்முதல் வரி விதிக்கப்படும்.

இரு கல்வி இலாகா தீர்மானங்கள்

சில மத்திய பாடசாலைகளில் பிரவேசச் சோதனை

கொழும்பு, நவ 12

கல்வி இலாகா இரு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. அவற்றில் ஒன்று சில அரசாங்க மத்திய பாடசாலைகளில் ஒரு பிரவேசச் சோதனை வைத்து, அதில் சித்தி அடைவோரையே பாடசாலையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது.

இதுவரை ஐந்தாம் வகுப்புச் சித்திபெற்ற எவரும் இப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வந்தனர். இப் புதிய திட்டம் எல்லா மத்திய பாடசாலைகள் சம்பந்தமாகவும் நடைபெறாட்டாது. அதிக மாணவர் கவிவதால் நெருக்கடி ஏற்படும் பாடசாலைகளில் மட்டுமே இத் திட்டம் அமுல் நடத்தப்படும்.

இரண்டாவது தீர்மானம் ஆசிரியர்மார் தங்கள் சொந்த ஊர்களுக்கு மாற்றப்படக்கூடாது என்றிருப்பதை ரத்துச் செய்யும் தீர்மானமாகும். இதை ரத்தாக்க வேண்டும் என கல்வி மந்திரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாண-வவுனியா வெங்காயம்

வேறிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய தடை

வடமாகாண சர்க்கார் ஏஜண்ட் அல்லது வவுனியா உதவி சர்க்கார் ஏஜண்ட் ஆகியவர்களின் உத்தரவின்றி யாழ்ப்பாணத்திலிருந்தோ அன்றி வவுனியாவில் இருந்தோ வெங்காயம் வேறிடங்களுக்குக் கொண்டு செல்லப்படாதென உணவுகூட்டுறவு இயக்க மந்திரி திரு ஏ இரத்தினாய்கா சர்க்கார்கெஜட்டில் வெளியிட்டுள்ளார்.

தேசத் துரோகிகளுக்குத் தண்டனை

புதிய ஐரோப்பிய சர்க்கார்களின் தீவிர நடவடிக்கை

புக்காரெஸ்ட், நவ, 11

ருமேனிய விவசாயக் கட்சித் தலைவர் டாக்டர் ஜூலியு மனியு தேசத் துரோக வேலையில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி எனக் காணப்பட்டது. அதன் பேரில் அவருக்கு கடுங்காவல் ஜீவியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது கட்சியின் உப தலைவருக்கும் இதே தண்டனையே விதிக்கப்பட்டுள்ளது.

மாஜி பிரதமருக்கு 30 வருட சிறை

பிராஹா, நவ. 11

ஸலோவாக்கியாவின் பழைய பிரதமர் டாக்டர் ஸடெபான் டிஸலோ நாட்டின் எதிரிகளோடு ஒத்துழைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் அவருக்கு 30 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

முன்னர் ஸலோவாக்கியா ஜெர்மன் பொம்மை அரசாங்கத்தின் தலைவராய் இருந்து கடந்த ஏப்ரலில் கொலை தீர்ப்பளிக்கப்பட்ட ஜோஸப்டிஸலோவின் மருமகனே இவர்.

(ராய்ட்டர்

ரஷியாவின் கையிலுப் அணுக்குண்டு!

சைபீரியாவில் வெற்றிகரமான பயிற்சி

பாரிஸ் பத்திரிகைச் செய்தி:

பாரிஸ், நவ. 11

பாரிஸில் இருந்து வெளியாகும் "லிண்டரேன் ஜியான்ட்" என்னும் பத்திரிகையின் மாஸ்கோ நிருபர் சோவியத் ரஷியா ஜூன் 15-ம்தேதியன்று சைபீரியாவில் ஒரு அணுக்குண்டைப் போட்டுப் பரீட்சித்து விட்டதாக அறிவித்துள்ளார். அவர் மேலும் கூறுவதாவது:-

"வெடிகுண்டு வீசப்பட்ட வேளையில் 281 அணுச்சக்தி நிபுணர்கள் அதனைப் பார்வையிட்டனர்.

வெடியின் அதிர்ச்சி 16 மைல் தூரம்வரை பாதித்தது இக் குண்டு வெகு சிறிய அளவில் 18 ருத்தல் பாரத்துடன் தயாரிக்கப்பட்டது. ஆயினும் இது வெகு திருப்திகரமான வெடியாகக் காணப்பட்டது. இந்த பரீட்சைபற்றிய அதிரகசியமான அறிகைகளை ரஷிய அணுச்சக்தி விஞ்ஞானிகள் ஒருபோது சோவியத் பிரதமர் ஸ்டாலினுக்குச் சமர்ப்பிப்பதற்காகத் தயாரித்துவருகிறார்கள்"

இந்நிகழ்ச்சி சம்பந்தமாக சோவியத் அயல்நாட்டு மந்திரி சோவியத் புரட்சி விழாவின் போது செய்த பிரசங்கம் கவனிக்கத்தக்கது. அவர் பின்வருமாறு பிரசங்கத்தில் குறிப்பிட்டார்:-

"அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஒரு புது வித மாயக் காட்சியைக் கண்டு வருகிறார்கள். இம்மாயக்காட்சி அதிகமாகப் பரந்திருக்கிறது. இது என்னவென்றால் தமது உள்ளார்ந்த பலத்தில் அலாமல் அணுக்குண்டு இரகசியம் நம்பிக்கைவைக்கும் மனோபாவம். ஆனால் அந்த இரகசியம் ஒழிந்து போய் இப்போது அதிக காலமாகிவிட்டது"

அமெரிக்கா சந்தேகம்

வாஷிங்டன், நவ 1

பாரிஸ் செய்திபற்றி வாஷிங்டன் விஞ்ஞானி ஒருவர் 13 ருத்தல் பாரத்தில அணுக்குண்டு தயாரிக்க முடியாது எனத் தெரிவித்தார். அத்துடன் அப்பயிற்சி நடைபெற்றிருந்தால் அது அலாஸகாவில் அலது ஜப்பானில் உள்ள அமெரிக்க யந்திரங்களால் பதிவு செய்யப்படிருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சாமாதானமே சோவியத் லட்சியம்

நியூயார்க், நவ. 12

சோவியத்உதவி அயல்நாட்டு மந்திரி விஷின்ஸகி அன்னிய பத்திரிகைகள் சங்கத்தில் நேற்றிரவு பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

"ரஷிய அயல்நாட்டுக் கொள்கை சமாதானமாகும். எனவே அமெரிக்காவோடு ஒத்துழைப்பது சாதகியம். ஆனால் அமெரிகக் பிற்போக்காளர் புதியுத்த நெருப்பை ஊதி வளர்க்கிறார்கள்.

ரஷியாவைக் தலையெடுக்க ஒட்டாது அழித்துவிடவிட்லரிட்ட திட்டமெல்லாம் எமக்குத் தெரியும். இன்று ஹிட்லர் வேஷம் போடும் யுதவெறி பிடித்த எல்லாப் பித்தர்களும் ஹிட்லரோடு போட்டிபோடும் ரீதியில் செல்கிறார்கள். இந்த பைத்தியக்கார மூளை குழம்பிய கூச்சலுக்கெதிராக யுதத்தை எதிர்த்து சமாதானத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறது ரஷியா பல ஊர்களில் யுதத்துயல் அடிக்கிறது. முக்கியமாக அமெரிக்கப் பிற்போக்கலகில் அதனைக் காண்கிறோம்"

பிரிட்டிஷ் அட்டார்னி ஜெனரலும், ஐ நா. சபை பிரதிநிதியுமான சேர் ஷோ கிரோஸ அதன்பின் பேசுகையில் "நான் யுத்ததைத் தடுக்க முடியாது என்று நம்பவில்லை அப்படித்தடுக்க முடியாதது போல் பேசுவதனால் கடைசியில் அதனைத் தடுக்க முடியாமலே போய்விடும்.

'பெரிய வல்லரசுகளிடையே ஒத்துழைப்பு என்பது அவையாவும் பொதுப் பிரச்னைகளை விட்டுகொடுக்கும் மனோபாவததுடன் ஈடுபட்டால்தான் முடியும்" என்றும் அவர் கூறினார்.

(ராய்ட்டர்)

கிங்ஸ்லியில் தனசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

கண்ணுக்கினிய ஜோடிகள்!
அபூர்வ நடனங்கள், பாடலகள் நிறைந்தது
விடுதலைக்குப்பின் கிருஷ்ணன் தோன்றும் மகத்தான 2வது படம

கன்னிகா

உங்கள் உள்ளங் கவர்ந்த நடிகர்களான
என் எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம்.எஸ சரோஜினி, எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் நடிப்பட நடிக்கிறார்கள்

மகாத்மா தியேட்டர் நெல்லியடி, கரவெட்டி
தனசரி மாலை 6 மணி, 9-30 மணி
இன்று மாலை 6 மணிக்கு மகத்தான ஆரம்பவிழா!
அதிர்ஷ்டத்தில் "ஐயா சிறுபெண்" என்னும் பாட்டைப்பாடி உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட அதே நடிகை நட்சத்திரப் இனிய பாட்டுகள். சிங்கார நவங்கள் காதல் கட்டங்கள் நிறைந்த இத்தரை ஓயத்தன் நடிக்கின்றார் இலங்கையில் முதன்முறையாக இங்கேயே இப்படம் காட்டப்படுகிறது.
சூரிய குமாரி நடித்த
"கடகம்"
விஜயகுமார். பேபி கமலா, டி. எஸ். பாக்கியா, பு. ஆர். ராமச்சந்திரன் முதலியோரும் நிறம்பட நடிக்கின்றனர்

பிரிட்டிஷ் பிரதமர்-இந்திய கவர்னர் ஜெனரல் சந்திப்பு

(1-ம் பக்கத் தொடர்)

ரானதத்தின் நிர்க்கதியான நிலையை தவிர்க்கவே இவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டதென்று நம்பத் தெரிவிக்கிறார்.

பாகிஸ்தான் சர்க்கார் அறிக்கை

இன்றிரவு பாகிஸ்தான் சர்க்கார் விடுத்துள்ள 1500 வார்த்தைகள் அடங்கிய அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கின்றனர்:-

இந்திய துருப்புகள் பாகிஸ்தான் பிரதேசமான ஜூனாகத் சமஸ்தானத்தைக் கைப்பற்றி யிருப்பதை பாகிஸ்தான் சர்க்கார் ஒப்புக்கொள்ள முடியாது. துருப்புகளை வெளியேற்றி பழைய நிலை ஏற்பட்டால்தான் இந்திய யூனியனுடன் சமரசப் பேச்சு நடத்தமுடியும். பாகிஸ்தான் சர்க்கார் ஜூனாகத்துக்கு 7000 டன் உணவுப் பொருளை மட்டும் அனுப்பியதே யொழிய துருப்புகளை அனுப்பவில்லை.

மார்மகோவா துறைமுகம்

லிஸபன், நவ 11

ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு இந்தியாவிலுள்ள போர்ச்சுகேய துறைமுகமான மார்மகோவா தேவைப்படுவதால் அதை போர்ச்சுகேய சர்க்கார் டமிருந்து விலைக்கு வாங்கவிரும்புவதாகவும் நேற்று ஹைதராபாத் சமஸ்தான பிரதம எஞ்சினீயர் திரு எஸ். எம். அலன் தெரிவித்தார் ஆனால் போர்ச்சுகேய சர்க்கார்கள் இந்தியாவுள்ள தனது பிரதேசங்களை எதையும் விற்கதயாராகஇல்லையென்று தெரிகிறது.

பாரிசில் நேரு பிறந்தநினக் கொண்டாட்டம்

பாரிஸ், நவ 11

தீபாவளி தினத்தையொட்டி நேற்றிரவு இங்குள்ள இந்திய சங்கத்தார் ஒரு விருந்து நடத்தினார்கள். அப்பொழுது பிரான்சிலுள்ள ராமகிருஷ்ண மிஷன் தலைவரான சுவாமி சிதபவானந்தா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியா சுதந்திரமடைந்ததால் இந்த வருடத்திய தீபாவளிக் கொண்டாட்டம் மிக முக்கியம் வாய்ந்ததாகும். மேல் நாடுகளும் கீழ்நாடுகளும் ஒன்றை ஒன்று அறிந்து கொள்வதற்கு முதலாவதான முயற்சி பிரான்ஸிலேயே நடைபெற்றது அப்பொழுது 1801 வது வருடத்தில் இந்திய சாஸதிரங்கள் முதலாவதாக லத்தீன் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. அதன்பயனாகவே ஐரோப்பாவிலுள்ள சர்வகலாசாலைகள் மூலமாக இந்தியாவின் மததத்துவத்தைப் பற்றி ஐரோப்பா அறிந்துகொள்ள முடிந்தது. இந்தியா பெற்றெடுத்துள்ள மகாத்மாகாந்தி இந்த நூற்றாண்டில் அவதரித்துள்ள ஒப்புவமையில்லா மகானுபாவர் ஆவர். இந்த விருந்துக்கு மடகாஸ்கர் நகரைச்சேர்ந்த இளவரசு ரத்சிமமநாகாவும் வந்திருந்தார்.

அமுதத வெள்ளிக்கிழமையன்று பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினக்கொண்டாட்டத்தை முன்னிட்டும் இந்த விருந்துக் கூட்டத்தில் அவரைப் பாராட்டி வாழ்த்தினர்.

இளைஞர்களே! வாசித்து விட்டீர்களா?
"இளைஞன்" -வார இதழ்
தனிப் பிரதி சதம் 10. வருட சந்தா ரூ. 5-00
பிரதி வேண்டுவோர் ஏஜெண்டுகளிடம் பெறலாம். இல்லாது விட்டால் உடனே எங்களுக்கு எழுதுங்கள். சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. ஏஜெண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜெண்டுகள் வேண்டும்.
இளைஞன் பிரசுராலயம்,
நிர். 2, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு.

பச்சிலைப்பழி கரைச்சித் தமிழாசிரியர் சங்கம்

ஆனையிறவு, நவ. 8

சென்ற 8-ம் தேதி சனிக்கிழமை காலையில் பளை ஸதான கலவன் ஸ்.ஸி. பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஏ. பி. சின்னத்துரை ஆசிரியர்களின் அவைத் தலைமையின் கீழ் பச்சிலைப்பழிகரைச்சித் தமிழாசிரியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

சென்றவட்டவரலாறு, வேம்போடுகேணி ஸ்.ஸி. பாடசாலைத் தலைமை ஆசிரியரும் கௌரவ காரியதரிசியுமாகிய திரு. ஆழ்வார்ப்பிள்ளை அவர்களால வாசிக்கப்பெற்று அங்கீகாரம் பெற்றது.

பண்டிதர் திரு. சோ இளமுருகனார் அவர்கள் பாஷை இலக்கியம் கற்பிக்கும் முறைகளை என்பவற்றை பீடிகையாகக் கொண்டு மிகச் சிறந்த நுண்ணிய குறிப்புகளை ஆதாரவுரையாக கொண்டு உபந்நியாசஞ் செய்தனர்.

ஆனையிறவு அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு ஸி. கந்தையா அவர்கள் பண்டிதரவர்களுடைய இவ்விய குறிப்புகளை பொட்டியும் அப்பண்டிதப் பெரியாரவர்கள் தனித் தமிழ்நலை விருத்திக்காகப் புரியும அரிய தொண்டுகளைப் பற்றியும் குறிப்புரை கூறினர்.

தலைவர் நிறைவுரையுடன் கூட்டம் நிறைவேறிற்று.

பிரதம மாஜிஸ்டிரேட் காலமானார்

கொழும்பு, நவ. 12

கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட்டாக சமீபத்தில் நியமிக்கப்பட்ட திரு. வ. எச். வஜபதினா நேற்றிரவு காலமானார். இவர் ரத்தினபுரி டிஸ்டிரிக்ட் நீதிபதியாக இருந்து கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் பதவியை பின்னர் ஏற்றிருந்தார்.

இந்திய வெங்காய ஏற்றுமதித் தடை

சென்னைக்கு இலங்கை உணவுக் கமிஷனர் பயணம்

கொழும்பு, நவ 12

இந்தியாவில இருந்து இலங்கைக்கு வெங்காய ஏற்றுமதிக்கு இந்திய சர்க்கார் தடை விதித்திருந்தது. இத்தடையை நீக்கும்படி இந்திய அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்க உணவு கமிஷனர் திரு கே. ஆளவாப்பிள்ளை சென்னைக்கு விமான மூலம் இன்று புறப்பட்டுள்ளார்.

கிறிஸ்மஸிற்கு உருளைக்கிழங்கு

கிறிஸ்மஸ் காலத்திற்கு இலங்கையில ஏராளமாக உருளைக் கிழங்கு கிடைக்குமென உணவுக் கமிஷனர் திரு. ஆள்வாப்பிள்ளை தெரிவித்துள்ளார். கிறிஸ்மஸ் தினத்துக்கடையில் சுமார் 900டன் உருளைக்கிழங்கு இலங்கைக்கு கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

பஸ் விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, நவ 12

சாவகச்சேரியிலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ள கெருடாவில் வடமராட்சி ஐக்கிய சங்கப் பொறுப்பில் பருத்தித்துறைக்கும் சாவகச்சேரிக்குமிடையில் ஓடுகின்ற பஸ் ஒன்று இன்று 10 மணியளவில் 35 பிரயாணிகளுடன் பாதையினின்றும் விலகி பக்கத்தேயுள்ள நெல் வயலுக்குள் புரண்டு விட்டது. பிரயாணிகளில் ஒருவர் மாத்திரமே காயமடைந்தார். அவர் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார். மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள வரும வரைக்கும் பஸ் அந்த இடத்திலேயே விடப்பட்டிருக்கின்றது. முன் இயந்திரத்திலேயுள்ள ஒரு வில்லு உடைந்தமையாலுமான இவ்விபத்து வந்ததென்று சாரதி கூறியுள்ளாராம். (ந-நி)

சிலான் நியூஸ் பேபர்ஸ் லிமிட்டட்டினாலாக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 13உ இந்த பத்திரிகை 194A, தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தாரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org